**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூன் 21) நடைபெறவுள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி முகமை கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை மட்டும் மனுவாக அளிக்கலாம்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

ஆவடி நகராட்சியில், பள்ளி மாணவர்களின் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

அம்பத்தூரை அடுத்த ஆவடி நகராட்சியில், மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி, புதன்கிழமை பெருநகராட்சி ஆணையர் மோகன் தலைமையில் நடைபெற்றது. நகராட்சிப் பொறியாளர் பாலசுப்பிரமணியம் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக ஆவடி நகர்மன்ற தலைவர் சா.மு.நாசர் பங்கேற்று கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

÷இப்பேரணியில் ஆவடி விவேகானந்தா பள்ளி மாணவர்கள் 400-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஆவடி பஜார் வீதி, பூந்தமல்லி நெடுஞ்சாலை உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக பேரணியாக வந்த மாணவர்கள், மழை நீர் சேகரிப்பு குறித்து நகராட்சி நிர்வாகத்தினரால் அச்சடிக்கப்பட்டிருந்த துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இப்பேரணியில் மழை நீர் சேகரிப்பு அமைப்புடன் கூடிய மாதிரி வீடு வடிவமைக்கப் பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதுகுறித்து நகராட்சி ஆணையர் மோகன் கூறியது: நாளுக்கு நாள் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. நீரின் தன்மையும் உவர்ப்பாக மாறி வருகிறது. இனி வரும் காலத்தில் இந்த நகராட்சியில் குடிநீர் பிரச்னை ஏற்படாத வகையிலும் நீரின் தன்மை கெட்டு விடாமலும் இருக்கும் வகையிலும் மழை நீர் சேகரிப்பை மக்களிடம் தீவிரமாக வலியுறுத்த உள்ளோம். புதிய வீடு கட்டுபவர்களிடம் கண்டிப்பாக மழை நீர் சேகரிப்பு அமைக்க உத்தர விடுகிறோம் என்றார்.

**வறட்சி மாவட்டமாக காரைக்கால் அறிவிப்பு**

புதுச்சேரி பிராந்தியத்துக்கு உள்பட்ட காரைக்காலை, வறட்சி மாவட்டமாக, அரசு புதன்கிழமை அறிவித்தது.

காரைக்கால் பிராந்தியத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததையொட்டியும், காவிரியில் உரிய தண்ணீர் கிடைக்கவில்லை என்பதாலும், காரைக்கால் மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக புதுச்சேரி அரசு அறிவித்திருக்கிறது. இதற்கான உத்தரவை, துணை நிலை ஆளுநர் இக்பால்சிங் பிறப்பித்தார்.

காரைக்கால் மாவட்டத்தில் வறட்சி பாதித்ததால், ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்கப்படுமென்று கடந்த மார்ச் மாதம் நடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தில் முதல்வர் என்.ரங்கசாமி அறிவித்திருந்தார்.

அதன்படி, வறட்சி பாதித்த 4,749 ஹெக்டேர் நிலத்துக்கு ரூ.9.50 கோடி இழப்பீடு வழங்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். காவிரியின் கடைமடைப் பகுதியான காரைக்காலுக்கு இந்த ஆண்டு கிடைத்திருக்க வேண்டிய 6 டிஎம்சி தண்ணீரில், தற்போதுவரை 1.6 டிஎம்சி தண்ணீர் கிடைத்திருக்கிறது. ÷மேலும், பிராந்தியத்தில் பெய்த மழை அளவு

1,311 மி.மீ.

தொடர்ச்சியான மழை இல்லாததால், இதுவும் விளை நிலங்களுக்குப் பயன்தரவில்லை. நீலம் புயலுக்குப் பிறகு, நவம்பர், டிசம்பர் மாதங்களில் காரைக்காலில் மழை இல்லை. இதனால், காரைக்கால் மாவட்டத்தை வறட்சி பாதித்த பகுதியாக அரசு அறிவித்திருக்கிறது என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

**காரைக்கால் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க நடவடிக்கை: அமைச்சர் மு. சந்திரகாசு உறுதி**

காரைக்காலை வறட்சி மாவட்டமாக புதுச்சேரி அரசு அறிவித்துள்ளதையடுத்து, விவசாயிகள் உள்ளிட்டோருக்கு தகுந்த நிவாரணத்தை புதுச்சேரி அரசு விரைவில் வழங்கும் என்றார் அமைச்சர் மு. சந்திரகாசு.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்துப்போனதன் விளைவாக காவிரி தண்ணீர் உரிய காலத்தில் கிடைக்கவில்லை. சம்பா பயிரிட்ட விவசாயிகள் பாதிப்படைந்தனர். அறுவடையின்போது பெரும் இழப்பு ஏற்பட்டது.

இதனால் காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக்கோரி பல்வேறு தரப்பினர் புதுச்சேரி அரசை கோரினர்.

இந்நிலையில் துணை நிலை ஆளுநரின் உத்தரவுப்படி சிறப்பு செயலர் (வருவாய்) எஸ். சுந்தரவடிவேல் புதன்கிழமை வெளியிட்ட ஆணையில், காரைக்கால் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார். இந்த உத்தரவு காரைக்கால் ஆட்சியர், சார்பு ஆட்சியர் உள்ளிட்டோருக்கும் அனுப்பப்பட்டது.

காரைக்காலில் புதன்கிழமை இருந்த புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசுவிடம் இதுகுறித்து கேட்டப் பாது:

காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென வேளாண் துறை சார்பில் முதல்வருக்கு பரிந்துரைக்கப்பட்டது. இவைகள் பரிசீலிக்கப்பட்டு தற்போது காரைக்கால் வறட்சி மாவட்டம் என்ற அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் விவசாயிகளுக்கு முதல்வர் அறிவித்த நிவாரணம் விரைவில் வழங்கப்படும். மேலும் வறட்சி மாவட்டம் என்ற அறிவிப்பின் வாயிலாக கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்கும் என்றார்.

வறட்சி பாதிப்பை பார்வையிட மத்தியக் குழுவை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என கேட்டதற்கு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

**பெரியாறு அணைப் பகுதியில் மழை: வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

பெரியாறு அணைப் பகுதியில் மழை பெய்து வருவதால், வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வைகை அணை நீர்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததால், அணைக்கு நீர்வரத்து இல்லாமல் இருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக இருந்தது. எனவே, ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மதுரை குடிநீருக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் இருந்து வந்தது.

இந்நிலையில், பெரியாறு நீர் பிடிப்புப் பகுதியில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், பெரியாறு அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால், பெரியாறு அணையில் இருந்து 800 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

புதன்கிழமை மாலை நிலவரப்படி அணைகளின் நீர்மட்டம்:

வைகை: நீர்மட்டம் - 30.45 அடி, நீர் வெளியேற்றம் - 60 கனஅடி, நீர்வரத்து - 141 கனஅடி, நீர் இருப்பு - 380 மில்லியன் கனஅடி.

பெரியாறு: நீர்மட்டம் - 117.10 அடி, நீர் வெளியேற்றம் - 800 கனஅடி, நீர்வரத்து - 1768 கனஅடி, நீர் இருப்பு - 2105 மில்லியன் கனஅடி.

மழையளவு: பெரியாறு - 7 மி.மீ., தேக்கடி 7 மி.மீ.

**நாளை விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஜூன் 21-ஆம் தேதி ஆட்சியர் அலுவலக வளாக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கத்தில் நடைபெற இருக்கிறது.

இது குறித்து ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இக்கூட்டத்தில் விவசாயி சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகள்

சம்பந்தமான மனுக்களை எழுத்துப்பூர்மவாகவோ அல்லது வாய்மொழியாகவோ தெரிவிக்கலாம்.

இதில், தெரிவிக்கப்படும் அனைத்து குறைகளும் உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

**ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணம் ரூ.132 கோடி ஒதுக்கீடு: தமிழக அரசுக்கு விவசாயிகள் சங்கம் நன்றி!**

ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு லட்சத்து 4 ஆயிரம்

ஹெக்டேருக்கு வறட்சி நிவாரணமாக ரூ.132 கோடி நிதியை ஒதுக்கியுள்ள தமிழக அரசுக்கு தமிழக விவசாயிகள் சங்கம் நன்றி தெரிவித்து
புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.
தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அதன் மாவட்ட தலைவர் கே.முருகேசன் தலைமையில்

நடந்தது.மாவட்ட செயலாளர் எம்.முத்துராமு,பொருளாளர் ஐ.ஜெயராஜ்,நிர்வாகிகள்

நாகநாதன்,எஸ்.முருகேசன்

ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சங்கத்தின் போராட்டத்தால் தமிழக
அரசு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கியிருக்கிறது.ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் ஒரு லட்சத்து 4 ஆயிரம்

ஹெக்டேருக்காக ரூ.132 கோடியை அரசு ஒதுக்கியிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதுவரை 70 சதவிகித விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது.ஆனால் பாதிக்கப்பட்டுள்ள பிற
விவசாயிகளுக்கும் நிவாரணம் விடுபட்டு விடாமல் வழங்கப்பட வேண்டும்.காலியாக உள்ள கிராம நிர்வாக அலுவலர்
பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்,குடிநீர் கிடைக்காத கிராமங்களுக்கு ஊராட்சி

நிர்வாகம் குடிநீர் கிடைத்திட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கொப்பரை வரத்து குறைந்ததால்தேங்காய் எண்ணெய் விலை உயர்வு**




கொச்சி:பருவ மழையால், கொப்பரை வரத்து குறைந்து, தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.கடந்த சில மாதங்களாக, உள்நாட்டில் தேங்காய் எண்ணெய் விலை, அதிக ஏற்ற, இறக்கம் இன்றி நிலையாக இருந்தது.

**கொப்பரை:**இந்நிலையில், கேரளாவில் தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், சந்தைக்கு கொப்பரை வரத்து மிகவும் குறைந்து போயுள்ளது.இதன் காரணமாக, கேரளாவில் ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 66.50ல் இருந்து, 70 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் இதன் விலை, 62ல் இருந்து, 68 ரூபாயாக அதிகரித்துள்ளது என, கொச்சி எண்ணெய் வர்த்தகர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் பீ.ராவ் தெரிவித்துள்ளார். பொதுவாக, சந்தைகளுக்கு, 1,200 டன் கொப்பரை வரத்து இருக்கும். ஆனால், இது, தற்போது, 300 - 400 டன்னாக சரிவுஅடைந்துள்ளது.பருவமழை தவிர, கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பால், விவசாயிகளும், வர்த்தகர்களும், கொப்ப ரையை கையிருப்பு வைத்துள்ளனர்.மேலும், டாலருக்கு எதிரான ரூபாயின் வெளி மதிப்பு சரிவால், இறக்குமதி செய்யப்படும் பாமாயில் உள்ளிட்ட இதர எண்ணெய்களின் விலையும் உயர்ந்துள்ளன.

**கொள்முதல்:**இச்சூழ்நிலையில், பெரிய நிறுவனங்கள் அதிக அளவில் தேங்காய் எண்ணெய் கொள்முதல் செய்து வருகின்றன. இது போன்ற காரணங்களாலும் இதன் விலை உயர்ந்து வருகிறது என, கொச்சியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் குறிப்பிட்டார். கொச்சி சந்தையில், கடந்த 10

நாட்களில், சில்லரை விற்பனையில், 15 கிலோ தேங்காய் எண் ணெ யின் விலை, 860ல் இருந்து, 1,020 ரூபாயாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**பட்டு உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தத்தால் கடும் பாதிப்பு**



சேலம்:சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பட்டு நூலிழை மீதான கூடுதல் இறக்குமதி வரியை நீக்க வலியுறுத்தி, சேலம் மாவட்டத்தில் உள்ள சுத்தப்பட்டு உற்பத்தியாளர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

**நெசவு தறிகள்:**சேலம் மாவட்டத்தில் கொண்டலாம்பட்டி, பூலாவரி, ஜாரிகொண்டலாம்பட்டி, நாட்டாமங்கலம், குகை, செவ்வாய்ப்பேட்டை, கருங்கல்பட்டி, மேச்சேரி, சிந்தாமணியூர், நங்கவள்ளி உள்ளிட்ட பகுதியில், 10 ஆயிரம் பட்டு நெசவு தறிகள் இயங்குகின்றன.

பட்டு ஜவுளி உற்பத்தியில் நேரடியாக, 10 ஆயிரம் குடும்பத்தினரும், டையிங், கலரிங், பாலிஷ் உள்ளிட்ட தொழி லில் மறைமுகமாக, 20 ஆயிரம் குடும்பத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர்.சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பட்டுக்கு, மத்திய அரசு, 5 சதவீத இறக்குமதி வரி விதித்து இருந்தது.நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் டில், இறக்குமதி வரி, 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பட்டு மற்றும் கர்நாடகாவில் இருந்து கொள்முதல் செய்யும், இந்திய பட்டு மூலமே பட்டு ஜவுளி உற்பத்தி தொழில் நடந்து வருகிறது.இறக்குமதி வரி உயர்த்தப்பட்டதால், ஒரு கிலோ பட்டு நூலிழை விலை, 2,800 ரூபாயில் இருந்து, 4,000 ரூபாயாக உயர்ந்தது. இந்திய பட்டு நூலிழை விலை, 2,000 ரூபாயில் இருந்து, 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இரண்டு பட்டு நூலிழையும் கடுமையாக விலை ஏற்றம் கண்டுள்ளதால், சேலம் மாவட்டத்தில் பட்டு உற்பத்தி தொழிலில், உற்பத்தியாளர்கள் தொடர்ந்து ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.சேலம் மாவட்ட சுத்தப்பட்டு ஜவுளி உற்பத்தியாளர் சங்க தலைவர் பலராமன், செயலாளர் மாதப்பன் தலைமையில் நடந்த கூட்டத்தில், சீன பட்டு நூலிழைக்கான கூடுதல் இறக்குமதி வரியை நீக்க வேண்டும் என, வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினர்.

**வர்த்தகம் :**மேலும், கோரிக்கையை வலியுறுத்தி, நேற்று முதல், பட்டு ஜவுளி உற்பத்தி மற்றும்

விற்பனை செய்யாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் வரும், 25ம் தேதி வரை நடத்த உள்ள இந்த வேலை நிறுத்தத்தால், தினமும், ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.இது குறித்து சுத்தப்பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

**சங்க செயலாளர் மாதப்பன் கூறியதாவது:**மத்திய அரசு, கடந்த பட்ஜெட்டில், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பட்டு நூலிழை மீதான வரியை உயர்த்தியது. இந்த வரி உயர்வால், பட்டு ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூடுதல் செலவினத்துக்கு உள்ளாகி, தொழிலில் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

**சேலை உற்பத்தி :**பட்டு நூலிழை விலை ஏற்றத்தால், ஒரு சேலை உற்பத்தி செய்ய, 300 ரூபாயில் இருந்து, 400 ரூபாய் வரை, இழப்பு ஏற்படுகிறது. சீன பட்டுக்கான இறக்குமதி வரியை குறைக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கவுள்ளோம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**காய்கறி விற்பனையில் லாபம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

திருக்கழுக்குன்றம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், தோட்டக்கலை பயிர்களில் அதிக லாபம் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், லத்தூர், அச்சிறுப்பாக்கம், உத்திரமேரூர் ஆகிய பகுதியில் மட்டும் விவசாயம் முழுமையாக நடைபெறுகிறது.

முக்கிய தொழில் விவசாயம்,

விவசாயம் சார்ந்த கால்நடைகள் வளர்ப்பு. தற்போது, பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து வருவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது.

வறட்சி

மாவட்டத்தில், பெரும்பாலான விவசாயிகள் சம்பா பட்டத்தில் மட்டும், நெல் பயிர் சாகுபடி செய்கின்றனர். ஏரிகளில் போதிய நீர் இல்லாததால் கோடைகாலத்தில், நீர் பற்றாக்குறை ஏற்படுவதால், இருக்கின்ற நீரை பயன்படுத்தி தோட்டக்கலை பயிர்களான கத்திரி, வெண்டை, பாகற்காய், புடலங்காய், சுரக்காய், காரமணி, எள், தர்பூசணி, பூசணி, பூச்செடிகள் மற்றும் கீரை வகைகள் சாகுபடியில் ஈடுபடுகின்றனர்.

கடுமையான வறட்சியின் காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளதால், பல விவசாயிகள் விவசாயம் செய்வது இல்லை, சிலர் சொட்டு நீர் பாசனத்தில் விவசாயம் செய்கின்றனர்.

திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் உள்ள, பொன்விளைந்தகளத்தூர் குறு வட்டத்தில், தினசரி, 20 டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயி தோட்டங்களில் நேரடியாக சென்று, மொத்த

வியாபாரிகள் லாரிகள் மூலம், காய்கறிகளை கொள்முதல் செய்து, சென்னை மாம்பலத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

மகளிர் குழுக்களைச் சேர்ந்தவர்கள், ரயில்கள் மூலம் காய்கறிகளை எடுத்துச் சென்று மாம்பலத்தில் வியாபாரம் செய்கின்றனர்.

உற்பத்தி குறைவு

இந்நிலையில், தை மாதத்தில், கத்திரி, வெண்டை, உள்ளிட்ட பல வகையான காய்கறி பயிர்களை நட்டு பராமரித்து வருகிறோம். பொதுவாக தோட்டக்கலை பயிர்கள் நட்ட, 40 நாட்களில் இருந்து பலன் கிடைக்கும்.

பங்குனி, சித்திரை மாதங்களில் அதிகமாக உற்பத்தி கிடைக்கும். அப்போது எல்லாம் விலை குறைவாக விற்பனை செய்யப்பட்டது. தற்போது, காய்கறி உற்பத்தி குறைந்ததால், காய்கறிகள் விலைகள் உயர்ந்துள்ளன. இதனால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

திருக்கழுக்குன்றம் பகுதி விவசாயிகள் சிலர் கூறியதாவது:

தற்போது நல்ல லாபம் கிடைத் தாலும், விவசாய இடுபொருட்கள் கடுமையாக உயர்ந்ததால், கிடைக்கின்ற வருவாயில் பெரும்பங்கு இதற்கே செலவாகிறது. விவசாயிகள் நலன் கருதி, இடுபொருட்கள் விலையில் மாற்றம் கொண்டுவர, தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டி தேவை**

ஸ்ரீபெரும்புதூர்:நெமிலி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில், கால்நடைகளுக்கு, தண்ணீர் தொட்டிகளை அமைக்க வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் அடுத்துள்ளது நெமிலி ஊராட்சி. இங்குள்ள, நெமிலி, காரந்தாங்கல் ஆகிய பகுதிகளில், 2,000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இவர்களில், பெரும்பாலானோர், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள ஏரி மற்றும் குளம் ஆகியவை, கால்நடைகளுக்கு பயன்பட்டு வந்தன. தற்போது, அனைத்து நீர்நிலைகளும் வறண்டு காணப்படுகின்றன.

இதனால், கால்நடைகள் தண்ணீர் தேடி அலை கின்றன. எனவே, ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், இருங்காட்டுகோட்டை, தண்டலம் ஆகிய பகுதிகளில், கால்நடைகளுக்கான தண்ணீர் தொட்டி திறக்கப்பட்டது போல், நெமிலி பகுதிகளிலும், தண்ணீர் தொட்டி திறக்க, ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கிராம மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**வரும் 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

திருவள்ளூர்:வரும், 21ம் தேதி, விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது.
திருவள்ளூர் மாவட்டத்தின் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வரும், 21ம் தேதி வெள்ளிக்கிழமை, ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்களில் காலை, 11:00 மணிக்கு நடைபெறுகிறது.
அன்றைய தினம், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை துறை, தோட்டக்கலை, வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.
எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பருவமழை துவங்காததால் விவசாயிகள் கவலை**

சங்கராபுரம்:பருவமழை துவங்காததால் சங்கராபுரம் பகுதியில் சாகுபடியை துவக்க முடியாமல் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.
சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக செய்யப்பட்டு வருகிறது. ஏரி பாசனம், ஆற்றுப் பாசனத்தை நம்பாமல் பல விவசாயிகள் கிணற்று பாசனத்தின் மூலம் விவசாயம் செய்கின்றனர்.கடந்த ஆண்டு போதிய மழையின்மையால் ஏரி, குளங்கள் வறண்டன. இதனால் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது.
மழையை எதிர்பார்த்து நாற்று விட்ட விவசாயிகள் விவசாய பணிகளைகளை துவங்காமல் உள்ளனர். போதிய மழை இல்லாததால் சங்கராபுரம் பகுதியில் 75 சதவீத விவசாய நிலங்கள் சாகுபடி செய்யாமல் கரம்பாகவே உள்ளது. இந்தநிலை நீடிப்பதால் இந்த ஆண்டு விவசாயம் செய்ய முடியுமா என ஏரி, ஆற்றுப் பாசன விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**ஜூன் 25ல் நாட்டுக் கோழி தீவன மேலாண்மை பயிற்சி**

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், நாட்டுக் கோழிக்கான தீவன மேலாண்மை குறித்து, இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 25ம் தேதி, "நாட்டுக்கோழிக்கான தீவன மேலாண்மை' எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது.

பயிற்சியில், நாட்டுக் கோழி ரகம், வளர்ப்பு முறை, தீவன அளவு போன்ற பல்வேறு தலைப்பில், பயிற்சி அளிக்கப்பட உள்ளது. விவசாயிகள், பண்ணையாளர் உட்பட விருப்பம் உள்ள அனைவரும் பங்கேற்கலாம்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும், 24ம் தேதிக்குள், நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் அல்லது, 04286 - 266345, 266650, 266244 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், நாட்டுக் கோழிக்கான தீவன மேலாண்மை குறித்து, இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 25ம் தேதி, "நாட்டுக்கோழிக்கான தீவன மேலாண்மை' எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது.

பயிற்சியில், நாட்டுக் கோழி ரகம், வளர்ப்பு முறை, தீவன அளவு போன்ற பல்வேறு தலைப்பில், பயிற்சி அளிக்கப்பட உள்ளது. விவசாயிகள், பண்ணையாளர் உட்பட விருப்பம் உள்ள அனைவரும் பங்கேற்கலாம்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும், 24ம் தேதிக்குள், நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் அல்லது, 04286 - 266345, 266650, 266244 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பயிறு வகை விதை பண்ணை அமைக்க அறிவுரை : வேளாண் துறை அழைப்பு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயிறு வகை சான்று விதை பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.விதைசான்று உதவி இயக்குனர் கிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், தற்போது, பரவலாக மழை பெய்து வருகிறது. இதை பயன்படுத்தி பயறு வடகை பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். மத்திய, மாநில அரசு பயறு வகை உற்பத்தியை அதிகப்படுத்த பல வகை விவசாய நலத்திட்டங்களை செயல்படுத்த பயறு வகை உற்பத்தியை அதிகப்படுத்த வேளாண் துறை மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

* பயறு வகை ரகங்கள்: விவசாயிகளுக்கு தேவையான பயிர்களில் துவரையில் கோ 6, எல்.ஆர்.ஜி.,41 ரகங்களும் பாசிப்பயிரில் கே.எம்., 2, வி.ஆர்.எம்., 1 ரகங்களும், உளுந்து பயிரில்

டி.எம்.வி.1, வி.பி.என்.,3, வி.பி.என்., 4 மற்றும் வி.பி.என்., 5 ரகங்களும், காராமணியில் கோ 6, கோ (சி.பி.,)7 மற்றும் சி.152 ஆகிய ரகங்களும் தேவையான அளவு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான பயறு வகை ரகங்களை வேளாண் துறை அலுவலர்களை அணுகி மானிய விலையில் பெற்று விதைப்பண்ணை அமைக்கலாம். * விதை அளவு: துவரையில் ஏக்கருக்கு, 4 கிலோ விதை 90 செ.மீ., க்கு 30 செ.சீ., இடைவெளியில் விதைத்து ஒரு சதுர மீட்டருக்கு மூன்று செடிகளும், உளுந்து, பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு ஏக்கருக்கு எட்டு கிலோ வீதம் 30 செ.மீ.,க்கு 10 செ.மீ., இடைவெளியில் விதைத்து, சதுர மீட்டருக்கு, 33 செடிகளும் மற்றும் காராமணியில் ஏக்கருக்கு, எட்டு கிலோ வீதம் 30க்கு 15 செ.மீ., இடைவெளியில் ஒரு சதுர மீட்டருக்கு 22 செடிகள் என்ற எண்ணிக்கையில் பராமரிக்க வேண்டும்.

* விதை நேர்த்தி: விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோய்களை தடுக்கும் பொருட்டு விதைப்பதற்கு 24 மணி நேரம் முன் ஒரு கிலோ விதையுடன் கார்பண்டாசிம் அல்லது திரம் 2 கிராம் அல்லது டிரைகோடொமா விரிடி நான்கு கிராம் அல்லது சூடோமோனாஸ் புலுசோசன்று 10 கிராம் கொண்டு பூச்சான விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிர்க்கு கொடுக்கும் பொருட்டு விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை ரைசோபியம் (பயறு வகை) ஒரு பாக்கெட் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஒரு பாக்கெட் ஆகியவற்றை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து கலவையுடன் உயிர் உர விதை நேர்த்தி செய்து நிழலில் உலர வைத்து பின் விதைக்க வேண்டும்.

* விதை பண்ணை: விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு வழங்கினால் உள்ளூர் சந்தை விலையுடன் பிரிமியம் மற்றும் உற்பத்தி மானியம் ஆகியவை சேர்த்து கிலோவுக்கு , 75 ரூபாய் வரை விலையாக கிடைக்கும்.

அப்போது, 500 கிலோவுக்கு, 34 ஆயிரம் ரூபாய் முதல் 37 ஆயிரத்து 500 வரை ஒரு ஏக்கருக்கு வருமானம் பெறலாம். தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு பயறு வகை பயிர்களில், 690 ஹெக்டேர் விதைப்பண்ணை அமைத்து, 218 மெட்ரிக் டன் சான்று பெற்ற பயறு வகை விதைகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து விவசாயிகளும் அந்தந்த வட்டாரத்தில் உள்ள உதவி விதை அலுவலரை அணுகி துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் காராமணி பயிர்களுக்கு உண்டான கரு மற்றும் ஆதார விதைகளை பெற்று ஆதாரம் மற்றும் சான்று விதைப்பண்ணைகளை அமைக்கலம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வீணாகும் நீரை சேமிக்க குட்டை அமைப்பு வறட்சிக்கு மாற்றாக விவசாயிகள் யோசனை**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கிணற்றில் உள்ள சொற்ப அளவு தண்ணீரை வீணாக்காமல் புதிதாக மண் குட்டை அமைத்து, அதில் தேக்கி வைத்து பின் தங்கள் வயலுக்கு பாய்ச்சி வருகின்றனர்.
சத்தியமங்கலம் பகுதியில் வசிக்கும் மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலை நம்பி உள்ளனர்.
வழக்கமாக, சத்தியமங்கலம் பகுதி கிணற்றில் எப்போதும் தண்ணீர் நிறைந்து காணப்பட்டதால், மின்மோட்டார் மூலம் வயலுக்கு நேரடியாக தண்ணீர் பாய்ச்சி வந்தனர். அவ்வப்போதைய சூழலுக்கு ஏற்ற பயிர்களை செய்தனர்.
கடந்த இரண்டு ஆண்டு வறட்சியால் நீர்நிலைகள் முற்றிலும் வறண்டன. குறிப்பாக, கிணற்றில் நீரோட்டம் இன்றி, குறைந்த அளவே தண்ணீர் உள்ளது. தற்போதைய மழையின்மை, கிணறு வறண்டதாலும், ஆழ்குழாய் அமைத்து கிடைத்த சொற்ப தண்ணீரை வைத்து ஆண்டு பயிர்களுக்கு பதிலாக, கோழிக்கொண்டை, செண்டுமல்லி போன்ற மலர் வகைகளை பயிர் செய்கின்றனர்.
பல்வேறு பகுதிகளில் வாழை, கரும்பு போன்ற பயிர் தண்ணீர் இன்றி வயலோடு வறண்டு போனது. தற்போது மின்தட்டுப்பாடு மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால் தண்ணீர் எடுத்துவிட்டவுடன், வயல் முழுவதும் பாய்வதில்லை. ஒரு ஏக்கரில் பரப்பளவு கொண்ட வயலில், கால் ஏக்கர் பாய்ந்தவுடன், கிணற்றில் தண்ணீர் தீர்ந்துவிடுகிறது. சில நேரங்களில் மின்சாரமும் தடைப்பாடு ஏற்படுகிறது.
மீண்டும் அதே வயலுக்கு தண்ணீர் பாய்ச்சும்போது தண்ணீர் பாய்ந்த, அதே கால் ஏக்கர் பரப்பளவில், மீண்டும் தண்ணீர் சென்று நின்றுவிடுவதால், வயல் முழுவதும் தண்ணீர் பாய்வதில்லை.
இதனை சமாளிக்க, விவசாயிகள், தற்போது மண் குட்டை அமைத்து கிணற்றில் இருக்கும் தண்ணீர் தேங்க, தேங்க மும்முனை மின்சாரம் இருக்கும்போது தண்ணீர் எடுத்துவிட்டு, இந்த மண் குட்டையில் தேக்கி வைத்துக்கொள்கின்றனர்.
குட்டையில் தண்ணீர் நிரம்பியவுடன், குட்டை தண்ணீரை வயலுக்கு எடுத்துவிட்டால் ஒரே முறையில் வயல் முழுவதும் தண்ணீர் பாய்ந்து விடுகிறது.
இக்குட்டை அமைக்கும் திட்டத்தால், இருக்கும் தண்ணீரை வைத்து ஓரளவு வயல்களுக்கு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

**வட மாநிலங்களில் மழைகாலம் துவக்கம்**

சென்னிமலை: வடமாநிலங்களில் மழைக்காலம் துவங்கியதால், சென்னிமலை பகுதியில் விசைத்தறியில் உற்பத்தியாகும் மோட்டா ரக பெட்ஷீட் ரகங்களுக்கு, அதிகளவு ஆர்டர்கள் வரத்துவங்கியுள்ளது.

சென்னிமலை பகுதியில் உள்ள விசைத்தறிகளில் பல்வேறு ரகங்களில் பெட்ஷீட் உற்பத்தியாகிறது.

ஒவ்வொரு சீசனுக்கும், ஒவ்வொரு ரக பெட்ஷீட் ரகங்களுக்கும் மவுசு இருக்கும். தற்போது தமிழகம், கேரளா மற்றும் வடமாநிலங்களிலும் மழைக்காலம் துவங்கி உள்ளதால், மேட்டா ரகங்களில் உற்பத்தியாகும் பெட்ஷீட் ரகங்களுக்கு நல்ல கிராக்கி உள்ளதாக, விசைத்தறியாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

சென்னிமலை பகுதியில், 5,000க்கும் மேற்பட்ட விசைத்தறிகள் இயங்குகிறது. இதில், அதிக அளவு, 10 நெம்பர் நூலை பயன்படுத்தி, பெட்ஷீட்கள் உற்பத்தியாகிறது. மோட்டா ரகமான ஆறாம் நெம்பர் நூலை பயன்படுத்தி, 600 தறிகள்தான் இயங்குகின்றன.

இந்த ரக பெட்ஷீட்களுக்கு வழக்கமாக எப்போதும் கிராக்கி ஏற்படாது. இந்த ஆண்டு வடமாநிலங்களிலும், தமிழகம், கேரளாவிலும் பரவலாக மழை பெய்து வருவதாலும், வானம் மேகமூட்டத்துடன் இருப்பதால், இந்த ஆறாம் நெம்பர் நூலில் உற்பத்தி செய்யப்படும் மோட்டா ரக பெட்ஷீட்களுக்கு கிராக்கி கூடியுள்ளது.

பாவுக்கு, 10 நெம்பர் நூலும், ஊடைக்கு ஆறாம் நெம்பர் நூலும் பயன்படுத்துவதால், பெட்ஷீட் திண்ணமாக தெரியும். இந்த மோட்டா ரகத்தில், பல ரகங்கள் இருந்தாலும், குறிப்பாக சப்போட்டா என்ற ரகம் அதிக மவுசில் உள்ளது. அதை அடுத்து சோலாப்பூர், சுரபி ஜக்காடு ரகங்களுக்கு கிராக்கி உள்ளது. இந்த ரக பெட்ஷீட்கள் உற்பத்தி குறைவாக உள்ளதால், தற்போது வடமாநில மக்களிடம் கிராக்கி இருப்பதால் விலை சற்று கூடியுள்ளது.

இந்த விலையேற்றம் விசைத்தறி உற்பத்தியாளர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தாலும், நூல் விலை உயர்ந்து வருவதும் கவலை கொள்ள வைக்கிறது

இந்த மோட்டாரக போர்வைகள், சென்னிமலையில் அதிகமாகவும், அதை அடுத்து முத்தூர், வெள்ளகோவில் பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களில் அதிக உற்பத்தியாகிறது.

ஈரோடு ஜவுளி மார்க்கெட்டிலும் இந்த ரக பெட்ஷீட்கள் விற்பனை சற்று அதிகரித்துள்ளது.

**நீர் பிடிப்பு பகுதிகளில் கொட்டும் மழை 45 அடியை தொட்ட பவானிசாகர் அணை**

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் கனமழை பெய்வதால், அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் நேற்று

காலை, 45 அடியாக உயர்ந்தது.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் கலக்கும் இடத்தில், இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் சகதியை கழித்து நீர்பிடிப்பு மொத்த உயரம், 105 அடியாகும். அணையின் நீர்தேக்க கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும்.

இந்த அணையில் இருந்து வெளிவரும் தண்ணீர், கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதியை சேர்த்து மொத்தம், 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள், பவானி ஆற்றின் மூலம் வெளிவரும் தண்ணீரால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய பாசனப்பகுதிகளில் மொத்தம், 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்பெறுகிறது. தவிர புன்செய்புளியம்பட்டி, சத்தி, கோபி, பவானி உள்ளிட்ட நகராட்சி மற்றும் நூற்றுக்கணக்கான டவுன் பஞ்சாயத்து, கிராம பஞ்சாயத்து பகுதிகளுக்கு பவானிசாகர் அணையின் தண்ணீரே குடிநீரின் ஆதாரமாக விளங்குகிறது.

முக்கியதுவம் பெற்ற பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில், கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யாததால் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்தது. அதேசமயம் அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் கடந்த மாதம், 29 அடியானது.

இதனால் மின் உற்பத்தி மற்றும் மீன் பிடிப்பு தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

இந்நிலையில், பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மற்றும் கூடலூர் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

மேலும் மேற்குதொடர்ச்சி மலை பகுதியில் பலத்த மழை பெய்வதால், பவானிசாகர் அணையின் மேல் பகுதியில் இருக்கும் பில்லூர் அணையிலும் தண்ணீர் நிரம்பி, உபரி தண்ணீர் வெளியேற்றப்படுவதால், கடந்த ஒரு வாரமாக பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

நேற்று காலை, ஏழு மணியளவில் பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு, 5,483 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 5 கனஅடியும், பவானி ஆற்றில் வினாடிக்கு, 200 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே நேரத்தில் பவானிசாகர் அணையின் நீர் மட்டம், 44 அடியாகும். தற்போது, 45 அடியாக உள்ளது. அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், ஈரோடு மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பசுந்தேயிலை வரத்து அதிகம்விவசாயிகள் திணறல்**

கோத்தகிரி:கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கொள்முதல் நிலையங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது. இதனால், தேயிலை தோட்டங்களில் கடந்த இரண்டு வாரங் களாக பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலையும் தேங்கியுள்ளது. தொழிற்சாலைகளில் தேக்கமடைந்துள்ள பசுந்தேயிலை முழுவதும் அரைக் கப்படும் வரை, விவசாயிகளிடம் இருந்து பசுந்தேயிலை வாங்கப்படுவதில்லை. இதனால், ஒன்னதலை விவே கான ந்தா விவசாயிகள் சங்கம் உட்பட சிறு தேயிலை விவசாயிகள் சங்கங்களின் கொள்முதல் நிலையங்களிலும் பசுந்தேயிலை குவிந்து வருகிறது. இதனை தொடர்ந்து, வாரத்தில் ஒரு நாள் மட்டும் பசுந்தேயிலை வாங்குவதை கொள்முதல் நிலையங்கள் நிறுத்தி உள்ளன. இனிவரும் நாட்களில் கனமழைப் பெய்தால், உரமிட்ட தோட்டங்களில் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், விவசாயிகள் வினியோகிக்கும் பசுந் தேயிலைக்கு "கோட்டா' முறை அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது.அறுவடைக்கு தயாரான பசுந்தேயிலையை குறித்த நேரத்தில் பறித்து, வினியோகிக்காத பட்சத்தில், பசுந்தேயிலை "கரட்டு' இலையாக மாறி, தரம் குறை ந்து விடும் அபாயம் உள்ளது. இந்த சூழ்நிலையால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடந்த ஏலத்தில் பருத்தி விலை ஏறுமுகம்**

கும்பகோணம்: கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று விற்பனைக்கு வந்த பருத்தியின் சராசரி விலை 4,640 ரூபாய்க்கு கேட்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

காவிரி டெல்டாவில் நெல், கரும்புக்கு மாற்று பயிராக பருத்தி பெருமளவு சாகுபடியை விவசாயிகள் செய்து வருகின்றனர். இதற்காக கும்பகோணம், பாபநாசம், திருப்பனந்தாள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி மறைமுக ஏலம் வாரந்தோறும் நடைபெறும். அதன்படி, இந்தாண்டு கடந்த வாரம் புதன்கிழமை தொடங்கிய ஏலத்தில் கும்பகோணத்தில் அதிகபட்ச விலையாக குவிண்டாலுக்கு 4,550 ரூபாய், பாபநாசத்தில் 4,689 ரூபாய், திருப்பனந்தாளில் 4,667 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதில், வெளியூர் வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தியை கொள்முதல் செய்தனர்.

தொடர்ந்து இரண்டாவது முறையாக நேற்று கும்பகோணம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு ஆண்டலாம்பேட்டை, கீழசெம்மங்குடி, திருநறையூர், மகாஜனக்குடி, பூந்தோட்டம், திருவிடைமருதூர், மகாராஜபுரம், பரட்டை, கோவிலாச்சேரி, உடப்பாங்கரை, உத்தமதானி,

அகராத்தூர், இன்னம்பூர், நீலத்தநல்லூர் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் பருத்தியினை 300 குவிண்டால் கொண்டு வந்திருந்தனர்.
ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 122 லாட்டுகளில் வைக்கப்பட்டிருந்த பருத்தி பஞ்சுகளை விழுப்புரம், திருப்பூர், தேனி, கும்பகோணம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்த 10க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து ஏலப்பெட்டியில் போட்டனர்.
பின்னர் அந்த ஏலப்பெட்டியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் தஞ்சை மாவட்ட தனி அலுவலர் கலியராஜ், செயலாளர் ரவி, ஆய்வாளர் பரமசிவம், மேற்பார்வையாளர் பிரியாமாலினி ஆகியோர் முன்னிலையில் பிரித்து பார்க்கப்பட்டது.
அப்போது, வியாபாரிகள் அதிகபட்ச ஏலத்தொகையாக குவிண்டாலுக்கு 4709 ரூபாயும், குறைந்தபட்சமாக 4,470 ரூபாயும், சராசரியாக 4,640 ரூபாய் விலை கேட்டிருந்தனர்.
இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**உர ஆய்வாளருக்கு பயிற்சி**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தை சேர்ந்த உர ஆய்வாளர்களுக்கு உரக்கட்டுப்பாடு குறித்து பயிற்சி வேளாண் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடந்தது.
உர ஆய்வாளர்களுக்கு உரக்கட்டுப்பாடு குறித்த பயிற்சியின் போது, வேளாண் துறை இணை இயக்குனர் ராமதாஸ் தலைமை வகித்தார். விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் துவக்கி வைத்தார்.
வேளாண் உதவி இயக்குனர் கலைவாணன், உர மாதிரி எடுப்பதில் தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்து, விளக்கம் அளித்தார். இப்கோ உர நிறுவன அலுவலர் மன்னன், ஸ்பிக் உர நிறுவன அலுவலர் சுதாகரன், உர ஆய்வாளர்கள் செல்வராஜ், ஆனந்த பிரியா, அக்ரோ நிறுவன மேலாளர் மோகன் ஆகியோர் பங்கேற்றனர்.
உர ஆய்வாளர் சிவகாமி நன்றி கூறினார்.

**2ம் நாளாக தொடரும் விவசாயிகள் பட்டினி போராட்டம்: சமரச பேச்சு தோல்வி!**

தஞ்சாவூர்: தஞ்சையில், சர்க்கரை ஆலை நிர்வாகத்தைக் கண்டித்து விவசாயிகள் நடத்திய பட்டினி போராட்டத்தை விலக்கிக் கொள்ள ஆர்.டி.ஓ., தலைமையில் அதிகாரிகள் நடத்திய சமரச பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனால், 2ம் நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்து நடந்தது.
தஞ்சையில், திருஆரூரான் சர்க்கரை ஆலை, அம்பிகா சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலை நிர்வாகமும், 84 கோடி ரூபாய் மதிப்பில், ஆலை அரைவைக்கு பெற்ற கரும்புக்கு பணம் தராமல் விவசாயிகளுக்கு நிலுவை வைத்துள்ளன.

"இதை பெற்றுத்தர வேண்டும்' என, தஞ்சை கலெக்டர் மற்றும் வேளாண்மைத்துறை உயரதிகாரிகளிடம் விவசாயிகள் பலமுறை கோரிக்கை மனு கொடுத்தனர். ஆனால், எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

தஞ்சை அருகே திருமண்டங்குடியில் இயங்கி வரும் திருஆரூரான் சர்க்கரை ஆலை முன், தொடர் பட்டினி போராட்டத்தை நேற்று முன்தினம் விவசாயிகள் துவக்கினர். இதில், கரும்பு பிரிவு செயலாளர் சரபோஜி, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் சுவாமிமலை விமலநாதன், பாபநாசம் ஒன்றிய செயலாளர் முருகேசன், கும்பகோணம் வட்டத்தலைவர் கலியபெருமாள், முன்னோடி விவசாயிகள் மகாலிங்கம், நடராஜன், மாவட்ட துணைத்தலைவர் சின்னதுரை உள்பட 200 விவசாயிகள் பங்கேற்றனர்.

இதையடுத்து, இரவு 9 மணியளவில், கும்பகோணம் ஆர்.டி.ஓ., சங்கரநாராயணன், பாபநாசம் தாசில்தார் கிருஷ்ணமூர்த்தி, டி.எஸ்.பி., சீனிவாசன் மற்றும் ஆலை நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட குழுவினர், போராட்டத்தினரிடம் சமரச பேச்சு நடத்தினர்.

இரவு 10:30 மணி வரை சமரச பேச்சு தொடர்ந்தது. ஆனால், முடிவில் உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை. முடிவில், அதிகாரிகள் சமரசம் தோல்வியில் முடிந்தது.

இதுகுறித்து, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலாளர் சுவாமிமலை விமல்நாதன் கூறியதாவது:

விவசாயிகளுக்கு திருஆரூரான் சர்க்கரை ஆலையில், நிலுவையிலுள்ள தொகையில், 22 கோடி ரூபாயை இம்மாதம் (ஜூன்) 30ம் தேதிக்குள்ளும், மீதமுள்ள 18 கோடி ரூபாயை ஜூலை 31ம் தேதிக்குள்ளும் தரப்படும் என, பேச்சுவார்த்தையில் அதிகாரிகள் கூறினர்.

ஆனால், ஏற்கனவே ஆலை நிர்வாகம் சார்பில் தஞ்சை கலெக்டர் முன்னிலையிலேயே, பலமுறை உத்தரவாதம் அளித்தும் நிறைவேற்றப்படாததை சுட்டிக்காட்டி, 30ம் தேதி தரப்படும் தொகைக்கான செக்கை முன்தேதியிட்டு உடனே ஆலை நிர்வாகம் தந்தால், போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி கொள்ளப்படும் என, விவசாயிகள் தரப்பில் கூறினோம்.

கரும்பு கட்டுப்பாடு ஆணை 1966 விதிகளின்படி, தாமதமான காலத்துக்குரிய வட்டியையும் சேர்த்து, நிலுவை பணத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இறுதிவரை உடன்பாடு எட்டாததால் இரண்டாம்நாளாக பட்டனி போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இவ்விவகாரத்தில், தஞ்சை கலெக்டரின் நடவடிக்கை, விவசாயிகளுக்கு போதுமான திருப்தியை அளிக்கவில்லை. இதற்கு பிறகாவது, உரிய கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

**விவசாய கடனை தள்ளுபடி செய்யணும்: அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை**

திருத்துறைப்பூண்டி: "தற்கொலை சாவிலிருந்து விவசாயிகளை காப்பாற்றி விவசாயத்தை தலைநிமிர செய்யும் வகையில், விவசாய கடன்களை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்' என, திருத்துறைப்பூண்டி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில், கடந்தாண்டு, காவிரி நீரின்றி நெல் சாகுபடி அறவே பாதிக்கப்பட்டது. நடப்பாண்டும் குறுவை சாகுபடியின்றி பாதித்துள்ள விவசாயிகளை தற்கொலை சாவிலிருந்து காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை விவசாயிகளிடம் வலுத்துள்ளது. கூட்டுறவு வங்கிகளில், வட்டியில்லா விவசாய நகைக்கடன் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்களை தள்ளுபடி செய்து, விவசாயிகளின் சுமையை குறைக்க வேண்டும். மேலும் சம்பா சாகுபடியை மேற்கொள்ள கர்நாடகா அரசிடமிருந்து, தமிழகத்தின் பங்களிப்பு நீரை இம்முறையாவது பெற்றுத்தர வேண்டும் எனவும் விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கடந்தாண்டு மேட்டூர் அணையில், போதிய தண்ணீரின்றி சம்பா சாகுபடிக்காக தாமதமாக, செப்., 17ம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டது. ஒருபோக சம்பா சாகுபடி கைகொடுக்கும் என, விவசாயிகள் மும்முரமாக சாகுபடி பணியை மேற்கொண்டனர்.

ஆனால், சம்பா பயிர்கள் வளர்ந்து, சூல் வைக்கும் தருணத்தில், போதிய தண்ணீரின்றி சாகுபடி அறவே பாதித்தது. இதனால், விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர். நடப்பாண்டு, குறுவை சாகுபடி செய்யலாம் என்னும் நம்பிக்கையில், அவ்வப்போது பெய்யும் மழையை கொண்டு கோடை உழவை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், மேட்டூர் அணையில் நீர்மட்டம் 16 அடி மட்டுமே இருப்பதால், காவிரி நீர் கேள்விக்குறியாகி, குறுவை சாகுபடியும், பொய்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

போர்வெல் வசதியுள்ள விவசாயிக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால், காவிரி டெல்டாவில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், ஆற்றுப்பாசனத்தை நம்பியுள்ள லட்சக்கணக்கான விவசாயிகள் குறுவை சாகுபடி செய்வது கேள்விக்குறியாகியுள்ளது.

"நமது நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறுகையில், ""டெல்டா மாவட்டங்களில், தொடர்ந்து இரு முறை குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்தாண்டு சம்பா சாகுபடியும் பெருமளவில் பாதித்தது. இதனால், அதிகளவில் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். இதுபோல, நடப்பாண்டும் நடக்காமல் இருக்க, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கிய விவசாய கடன், வட்டியில்லா நகை

கடனை தள்ளுபடி செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**தென்மேற்கு பருவமழை தாமதம்கொடைக்கானல் விவசாயிகள் விரக்தி**

கொடைக்கானல்:தென்மேற்கு பருவமழை பெய்யாததால், கொடைக்கானல் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.கொடைக்கானல் தாலுகாவிலுள்ள பள்ளங்கி, வில்பட்டி, பூம்பாறை, மன்னவனூர், கூக்கால், பழம்புத்தூர், புதுப்புத்தூர், குண்டுபட்டி, கவுஞ்சி, பூண்டி, கிளாவரை, போளூர் போன்ற பல கிராமங்களில் உருளைக்கிழங்கு, காரட், பூண்டு ஆகியவற்றை அதிகளவில் பயிரிடுகின்றனர். கடந்தாண்டு மழை இல்லாத காரணத்தால், இவற்றை பயிரிட்ட பல விவசாயிகள் நஷ்டமடைந்தனர். இந்தாண்டு தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த கொடைக்கானல் விவசாயிகள் விதை உருளைக்கிழங்குகளையும், உரங்களையும் வாங்கி கலந்து பயிரிட்டனர். ஆனால், எதிர்பார்த்தபடி போதிய அளவு மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.விவசாயி பரமசிவம் கூறுகையில், ""10 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிரிட்டுள்ளேன். கூலி உள்பட மொத்தம் 4 லட்ச ரூபாய் செலவாகியுள்ளது. கொடைக்கானல் நகரில் சாரல் மழை பெய்கிறது. கிராமங்களில் அந்த மழையும் இல்லை. மழை நன்றாக பெய்தால்தான் உருளைக்கிழங்கு விளையும். இல்லாவிட்டால் பல லட்ச ரூபாய் பாதிப்பு ஏற்படும்," என்றார்.

**காய்கறிகள் விலை உயர்வுண்டுபோதிய விளைச்சல் இல்லை**

ஒட்டன்சத்திரம்:காய்கறிகள் உச்சபட்ச விலைக்கு விற்ற போதிலும் விளைச்சல் இல்லாமல் போனதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.அதிக உற்பத்தி, தேவை குறைவு உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு எப்போதுமே நல்ல விலை கிடைப்பது இல்லை. அத்தி பூத்தாற்போல் சில சமயங்களில் நல்ல விலை கிடைக்குமேயாயின் விளைச்சல் எதிர்பார்த்தபடி இருக்காது. வரத்து குறைவு காரணமாக தற்போது பீன்ஸ், கொத்தவரை, வெண்டை, தக்காளி.

வெங்காயம் உள்ளிட்ட காய்கள் அதிக விலைக்கு விற்கிறது. ஆனால் வறட்சி காரணமாக போதிய விளைச்சல் இல்லாததால் நல்ல விலை கிடைத்த போதிலும், விவசாயிகளால் அதனை பயன்படுத்த முடிவில்லை.கடந்த ஆண்டு துவக்கத்தில் கனமழை காரணமாக ஒட்டன்சத்திரம் பகுதியில் காய்கறி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. தக்காளி, பீன்ஸ் உள்ளிட்ட பயிர்கள் மிகவும் சேதமடைந்தன. இதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்தபடி மகசூல் கிடைக்காமல் போனது. பீன்ஸ் கிலோ 50 ரூபாய்க்கு மேல் விற்ற போதிலும் விளைச்சல்

இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். தற்போது வெங்காயம் கிலோ ரூ.100க்கும், தக்காளி கிலோ ரூ.35க்கு மேல் விற்ற போதிலும் ஒருசில விவசாயிகளே பலனடைந்து உள்ளனர்.பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சியால் காய்கறி பயிர்கள் காய்ந்து விட்டன. இதனால் விதைத்த அளவிற்கு கூட வருமானம் ஈட்ட முடியவில்லை.தற்போது விவசாய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்த போதிலும் போதுமான விளைச்சல் இல்லாமல் போனதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**பெயரளவில் செயல்படும் உழவர் சந்தை வெறிச் :முழுவீச்சில் இயங்க நடவடிக்கை அவசியம்**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் உழவர் சந்தையில் விவசாயிகளின் வருகை குறைவால், பெரும்பாலான கடைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

வெளிமார்க்கெட்டை விட கிலோவிற்கு 10 ரூபாய் வீதம் அனைத்து காய்கறிகளும் விலை குறைவாக விற்கப்படும் நிலையில், உழவர்சந்தையை முழுவீச்சில் செயல்பட வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் ராமநாதபுரம், பரமக்குடி, கமுதியில் உழவர் சந்தை திறக்கப்பட்டது.

கமுதியில் செயல்பட்ட உழவர் சந்தை பல காரணங்களால் மூடப்பட்டது. ராமநாதபுரத்தில் துவக்கத்தில், சுறுசுறுப்புடன் செயல்பட்டு வந்த இச்சந்தையில் 48 கடைகள் இருந்தன. தற்போது 14 கடைகள் மட்டுமே பெயரளவில் செயல்படுகிறது. வெளிமார்க்கெட்டை விட, அனைத்து காய்கறிகளும் கிலோவிற்கு, 10 ரூபாய் வரை விலை குறைவாக உள்ளது. மேலும், உழவர்சந்தையில் சேதமடைந்த கழிப்பறையில் தண்ணீர் வசதியும் இல்லை. மழை காலங்களில் தண்ணீர் வெளியேற முடியாமல் தேங்கிநிற்பதால், வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் வரமறுக்கின்றனர்.இதன் வாடிக்கையாளர்கள் கூறியவைஎம். தாய்ரா, ராமநாதபுரம்: கடந்த 12 ஆண்டுகளாக உழவர் சந்தையில் காய்கறி வாங்கிச் செல்கிறேன். இங்கு சரியான எடையளவு, விலை குறைவு, தரம் ஆகியவை இருக்கிறது. மற்ற இடங்களில் இந்த திருப்தி கிடையாது. எஸ்.மெகர்நிஷா, சின்னக்கடை வீதி: கடந்த 8 ஆண்டுகளாக இங்கு காய்கறி வாங்குகிறேன். குறைந்த தொகையில் பை நிறைய வாங்கிச் செல்கிறேன். வேறு எங்கும் காய்கறி வாங்குவது கிடையாது. உழவர்சந்தை நிர்வாக அலுவலர், கே. சின்னாண்டி(பொறுப்பு) கூறியதாவது: ராமநாதபுரம் உழவர் சந்தைக்கு வாலாந்தரவை, உச்சிப்புளி, பாண்டியூர், அரசடிவண்டல் உள்ளிட்ட கிராமப்புற விவசாயிகள் கத்தரி, வெண்டைக்காய், தக்காளி, புடலை, கீரை உள்ளிட்டவற்றை தரகர் இன்றி இங்கு நேரடியாக விற்கின்றனர். 136 பேருக்கு உழவர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. பாண்டியூர், நயினார்கோவில், அரசடிவண்டல் போன்ற பகுதியில் இருந்து வரும் விவசாயிகள் பெரும்பாலானோர் சிரமத்தை கருதி அரண்மனை பகுதியில்

தரை கடை விரித்து வியாபாரம் செய்வதால், உழவர் சந்தையில் பல கடைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

**வி.ஏ.ஓ.,க்களை தேடி அலையும் விவசாயிகள்**

முதுகுளத்தூர்:முதுகுளத்தூரில் வி.ஏ.ஓ.,க்கள் இருக்கும் இடம் தெரியாததால், வறட்சி நிவாரணம் பெற முடியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

முதுகுளத்தூரில் சில வி.ஏ.ஓ.,க்கள் பல கிராமங்களுக்கு கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு வருவாய் கிராம விவசாயிகள், பல கூட்டுறவு சங்கங்களில் பயனாளிகளாக இருப்பதால், வி.ஏ.ஓ.,க்கள் பல இடங்களுக்கு செல்ல வேண்டி உள்ளது. இதனால் பள்ளி, கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்களுக்கான மற்றும், பொதுமக்களுக்கு தேவையான சான்றிதழ்கள் பெற, பயனாளிகள் பல வாரங்களாக அலைகின்றனர். ஜூன் 10ம் தேதிக்குள், வறட்சி நிவாரண தொகை பட்டுவாடா செய்யபட்டுவிடும் என்ற அறிவிப்பு பொய்யாகியுள்ளது.

மேலும், முதுகுளத்தூரில் வருவாய் தீர்வாய கணக்குகள், ஜமாபந்தி மூலம் தீர்வு செய்யபட்டு வருவது உள்ளிட்ட பல பணிகளால், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை கிடைப்பதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.கீழச்சாக்குளம் பாலசுப்பிரமணி கூறுகையில், ""வறட்சி நிவாரண தொகையை, வி.ஏ.ஓ.,க்கள் பரிந்துரைக்க வேண்டும். ஆனால் இவர்கள் இருக்கும் இடம் தெரியாமல், விவசாயிகள் அலைகழிக்கபடுகின்றனர்.

முறையீடு செய்தால், இம்மாதம் 28ம் தேதிக்கு பின்தான் பட்டுவாடா என உதாசீனப்படுத்துகின்றனர். இதுதொடர்பாக தாசில்தாரிடம் முறையிட்டுள்ளோம்," என்றார்.

தாசில்தார் மோகன் கூறுகையில், ""தாமதமின்றி வறட்சி நிவாரணம் பட்டுவாடா செய்ய, அனைத்து வி.ஏ.ஓ.,க்கள், கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடபட்டுள்ளது", என்றார்.

**நீர்மட்டம் 117½ அடியாக உயர்வு: முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு**

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 117½ அடியாக உயர்ந்துள்ள நிலையில், அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விவசாயிகள் நாற்றங்கால் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பாசன பகுதியின் நீர் ஆதாரமாக திகழும் முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதன் எதிரொலியாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று வினாடிக்கு 1,768 கன அடியாக நீர்வரத்து காணப்பட்டது. அணை நீர்மட்டம் நேற்று மாலையில் 117½ அடியாக உயர்ந்தது.அணை நீர்மட்டம் உயர்ந்து வருவதை அடுத்து, தேனி, மதுரை மாவட்ட குடிநீர் தேவைக்காக முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த கூடுதல் தண்ணீர் திறப்பால் லோயர் கேம்ப் மின் உற்பத்தி நிலையத்தில் 2 ஜென ரேட்டர்களில் மின்உற்பத்தி தொடங்கி உள்ளது. இதன்மூலம் சுமார் 80 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்படுகிறது.தற்போது கூடுதலாக திறக்கப்பட்ட தண்ணீரை குடிநீர் தேவைக்காக வைகை அணைக்கு கொண்டு செல்லும் வகையில் கம்பம் பள்ளத்தாக்கு பாசன மடைகள் திறக்கப்படவில்லை. இதனை அடுத்து வைகை அணைக்கு நீர்வரத்து நேற்று காலையில் வினாடிக்கு 141 கன அடியாக உயர்ந்தது.

<u>நாற்றங்கால் அமைக்கும் பணி</u>

முல்லைப்பெரியாறு அணை மற்றும் கூடலூர், கம்பம், உத்தமபாளையம் என தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் சாரல் மழை நீடித்து வருவதால் விவசாயிகள் நெல் நாற்றங்கால் அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வரு கின்றனர். இந்த மழைநீரைக் கொண்டு நாற்றங்கால்களை விவசாயிகள் அமைத்து வருகின்றனர்.தற்போதைய நிலையில் இன்னும் 25 நாட்களுக்கு பிறகு நடவுப் பணிக்கு தான் தண்ணீர் தேவைப்படும் என்று விவசாயிகள் கருதுகின்றனர். அதே நேரத்தில் இந்த இடைப்பட்ட 3 வார காலத்தில் பருவமழை காரணமாக முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் சுமார் 130 அடிக்கும் மேலாக உயர்ந்து விடும் என்பதால் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதில் சிக்கல் எதுவும் இருக்காது என்று விவசாயிகள் நம்புகின்றனர். மேலும் விவசாயிகளுக்கு கை கொடுக்கும் வகையில், கம்பம், கூடலூர், உத்தமபாளையம்,

சின்னமனூர் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதலே சாரல் மழை விட்டுவிட்டு பெய்து வருகிறது.

<u>மழையளவு</u>

முல்லைப்பெரியாறு அணை மற்றும் தேனி மாவட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் பெய்த மழையளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:–முல்லைப்பெரியாறு அணை–7, தேக்கடி–7, கூடலூர்–1, உத்தம பாளையம்–1, மஞ்சளாறு–4.

**திருவண்ணாமலையில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரசாரம் நகராட்சி தலைவர் தொடங்கிவைத்தார்**

திருவண்ணாமலை நகராட்சி சார்பில் மழை நீர் சேகரிப்பு குறித்த மாதிரி வீடு விழிப்பு ணர்வு பிரசாரம் தொடங்கப்பட்டது.

**மாதிரி வீடு**

திருவண்ணாமலை நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு திட்டம் குறித்து வார்டு, வார்டாக மக்களி டையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப் பட உள்ளது.

இதன் ஒரு பகுதியாக சினிமாவுக்கு செட் போடுப வர்களை கொண்டு மரத்தால் ஆன சிரிய வீடு செட் அமைக் கப்பட்டது. அந்த வீட்டின் மீது மழைநீர் பொழிவது போன்றும் அந்த மழைநீர் வடி கட்டி தொட்டியில் சேகரித்து ஆழ்துளை கிணற்றில் விழு வது போன்றும் மாதிரி வீடு அமைக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு**

ஒவ்வோரு வார்டாக நேரில் சென்று விழிப்புணர்வு ஏற் படுத்தும் வகையில் மாதிரி வாகன விழிப்புணர்வு பிரசார தொடக்கவிழா அருணா சலேஸ்வரர் கோவில் முன்பு நடந்தது.

நகராட்சி தலைவர் பாலச் சந்தர் விழிப்புணர்வு வாக னத்தை தொடங்கிவைத்தார். ஆணையாளர் விஜயலட்சுமி முன்னிலை வகித்தார். என்ஜி னியர் பாஸ்கர், சுகாதார ஆய்வாளர் ஆல்பர்ட், கவுன் சிலர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வார்டு வார்டாக இந்த மாதிரி விழிப்புணர்வு வாகனம் மூலம் பிரசாரம் செய்யப் படும். இதைப்பார்த்து மக்கள் தங்கள் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும் என்பதற்காக இப்படி விழிப்புணர்வு ஏற் படுத்துவதாக நகராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி தெரிவித்தார்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு**

பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பவானிசாகர் அணை

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்ட பவானிசாகர் அணையின் மொத்த உயரம் 120 அடியாகும். இதில் சகதி 15 அடி போக நீர்மட்ட உயரம் 105 அடியாக கணக்கிடப்படுகிறது. அணையின் இருந்து வெளிவரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களும், பவானி ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த 50 ஏக்கர் நிலங்களும் வளம் பெறுகிறது.

பவானிசாகர் அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாறும் நீர்வள ஆதாரங்களாக விளங்குகிறது.

பில்லூரில் மழை

கடந்த இரண்டு ஆண்டுகளாக பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அணைக்கு குறைந்த அளவு தண்ணீரே வந்தது. அதே சமயம் அரசு அவ்வப்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைய தொடங்கியது.

இதனால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து 29 அடியாக இருந்தது. மீன்பிடிப்பு தொழிலும், நீர்மின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது.
இந்த நிலையில் பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி, கூடலூர் மலைப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து பில்லூர் அணை நிறைந்து உபரி தண்ணீர் பவானி ஆற்றின் வழியாக வெளியேற்றுவதால் பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

கடந்த நான்கு நாட்களாக பவானிசாகர் அணைக்கு சராசரியாக வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் கிடு கிடுவென உயர தொடங்கியது. நேற்று மாலை 4 மணி அளவில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 45.58 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் வினாடிக்கு 5 கனஅடி தண்ணீரும், பவானி ஆற்றில் வினாடிக்கு 200 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**குறுவைபாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் சாகுபடி பாதிப்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் தஞ்சை வட்டார காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் வலியுறுத்தல்**

குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று வட்டார காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

**காங்கிரஸ் கூட்டம்**

தஞ்சை தெற்கு வட்டார காங்கிரஸ் கட்சி கூட்டம் கனகராஜ் தலைமையில் நடந்தது. நிர்வாகிகள் மதிவாணன், மணிவாசகம், உமாமகேஸ்வரி, அடைக்கலசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தஞ்சை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் நாஞ்சி.கி.வரதராஜன் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

கட்சியை வளர்க்க கிராம அளவில் அடிப்படை உறுப்பினர்களை சேர்த்து கமிட்டிகள் அமைக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளதை ஏற்று, இந்த பணியை முடித்து பட்டியலை அனுப்புவது. காவிரியில் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படாததால் குறுவை சாகுபடி செய்ய முடியவில்லை. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். மத்திய அரசு போதிய பேரிடர் நிவாரண நிதியை தமிழகத்திற்கு வழங்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் நெடுஞ்சாலை ஓரமாக வீடு கட்டி வசிப்பவர்கள் கழிப்பிடவசதி, தண்ணீர்வசதி இன்றியும், எந்த நேரத்திலும் வாகனங்களால் விபத்து நேரிடலாம் என்ற அச்சத்துடன் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மாற்று குடியிருப்புமனை வழங்கி அரசு செலவில் வீடு கட்டித்தர வேண்டும். கிராமப்புற பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தட்டுப்பாடு இன்றி கிடைத்திட மின் மோட்டார்கள் இயக்க தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும்.

தஞ்சை நகரை சுற்றி உள்ள விவசாய விளை நிலங்கள் குறைந்த விலைக்கு வாங்கி சட்ட விரோதமாக மனை பிரிவுகளை அமைத்து விற்கப்படுவதால் அடிப்படை வசதிகள் இன்றி அங்கு வசிப்பவர்கள் அவதிப்படுகிறார்கள். இதனால் விளை நிலங்கள் குறைந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இதனை கலெக்டர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தஞ்சை மாவட்ட மாணவர் காங்கிரஸ் செயலாளர் சிவனேசன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருந்தி ஏலம்**

கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருந்தி ஏலம் நடைபெற்றது.

**பருந்தி ஏலம்**

காவிரி டெல்டாவில் நெல், கரும்புக்கு மாற்று பயிராக பருத்தி பெருமளவு சாகுபடியை விவசாயிகள் செய்து வருகின்றனர். இதற்காக கும்பகோணம், பாபநாசம், திருப்பனந்தாள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் பருத்தி மறைமுக ஏலம் வாரந்தோறும் நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டு கடந்த வாரம் புதன்கிழமை தொடங்கிய ஏலத்தில் கும்பகோணத்தில் அதிகபட்ச விலையாக குவிண்டாலுக்கு ரூ.4550, பாபநாசத்தில் ரூ.4689, திருப்பனந்தாளில் ரூ.4667–க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதில் வெளியூர் வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தியை கொள்முதல் செய்தனர். தொடர்ந்து 2–வது முறையாக நேற்று கும்பகோணம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு ஆண்டலாம்பேட்டை, கீழசெம்மங்குடி, திருநறையூர், மகாஜனக்குடி, பூந்தோட்டம், திருவிடைமருதூர், மகாராஜபுரம், பரட்டை, கோவிலாச்சேரி, உடப்பாங்கரை, உத்தமதானி, அகராத்தூர், இன்னம்பூர், நீலத்தநல்லூர் ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் பருத்தியினை 300 குவிண்டால் கொண்டு வந்திருந்தனர். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 122 லாட்டுகளில் வைக்கப்பட்டிருந்த பருத்தி பஞ்சுகளை விழுப்புரம், திருப்பூர், தேனி, கும்பகோணம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்த 10 க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து ஏலப்பெட்டியில் போட்டனர்.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

பின்னர் அந்த ஏலப்பெட்டியினை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் தஞ்சை மாவட்ட தனி அலுவலர் கலியராஜ், செயலாளர் ரவி, ஆய்வாளர் பரமசிவம், மேற்பார்வையாளர் பிரியாமாலினி ஆகியோரது முன்னிலையில் பிரித்து பார்க்கப்பட்டது. அப்போது வியாபாரிகள் அதிகபட்ச ஏலத்தொகையாக குவிண்டாலுக்கு ரூ.4709 ம், குறைந்தபட்சமாக ரூ.4470–ம், சராசரியாக ரூ.4640–ம் விலை கேட்டிருந்தனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**பெரம்பலூரில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் கூட்ட மன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளா ண்மை சம்பந்தமாக நீர் பாசனம், வேளாண்மை சம் பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடு பொருட் கள், வேளாண்மை இயந்திரங் கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் குறைகளை தெரிவிக்கலாம் என கலெக்டர் கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**நெல்லை, குமரி மாவட்டங்களில் 7 அணைகளில் இன்று நீர்திறப்பு**

முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்ப தாவது:திருநெல்வேலி மாவட் டம், தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாய், தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங்கால் வாய் மற்றும் திருநெல் வேலி கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள பாசன பகுதிகளுக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு அணைகளில் இருந்து பாசனத் துக்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், 40,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் இதேபோல், கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தார்&1 மற்றும் சித்தார்&2 அணைகளில் இருந்து கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்துக்காக இன்று முதல் நீர் திறந்து விடப் படும். இதனால், குமரி மாவட்டத்தில் உள்ள 79,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**20 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி?**



புதுடெல்லி : மேலும் 20 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதிக்க நாளை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது. இது குறித்து, மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் நேற்று கூறியதாவது: நடப்பாண்டில் மத்திய அரசு அனுமதிப்படி இது வரை 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. எனினும், தேவைக்கு அதிகமாக இருப்பு உள்ளதால், மேலும் 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய பரிசீலிக்கப்படுகிறது. இது குறித்து, 21ம் தேதி நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்படும். ஏற்றுமதிக்கு அடிப்படை விலையாக ஒரு டன்னுக்கு 300 டாலர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தாமஸ் கூறினார்.

**சேலம் மாவட்டத்தில் பட்டு உற்பத்தியாளர்கள் ஸ்டிரைக்**

சேலம் : சேலம் மாவட்டத்தில் கைத்தறி சுத்தப்பட்டு உற்பத்தியாளர்கள் ஒரு வார வேலைநிறுத்தம் துவங்கியுள்ளனர். இதனால் தினமும் ரூ.1 கோடி வர்த்தகம் முடங்கியுள்
ளது. சேலம் மாவட்டத்தில் கொண்டலாம்பட்டி, நெய்காரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 3 ஆயிரம் சுத்தப்பட்டு கைத்தறி கூடங்கள் உள்ளன. இதில், பட்டு சேலைகள், பட்டு வேஷ்டிகள், பட்டு அங்கவஸ் திரங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில், மத்திய பட்ஜெட்டில் பட்டு நூலுக்கான இறக்குமதி வரி 5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதனால் பட்டு நூல் விலை கிடுகிடுவென உயர்ந்தது. பட்டு சேலை, வேஷ்டி நெய்தால் நஷ்டம் ஏற்படுகிறது என உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர். இதையடுத்து, பட்டு நூல் இறக்குமதி வரியை குறைக்க மத்திய அரசை வலியுறுத்தி நேற்று (19ம் தேதி) முதல் சுத்தப்பட்டு உற்பத்தியாளர்கள் ஒரு வார வேலைநிறுத்தத்தை துவங்கியுள்ளனர்.

இது பற்றி சங்கத்தலைவர் பலராமன்கூறுகையில், ‘‘6 மாதத்திற்கு முன்பு சீனா பட்டு நூல் கிலோ ரூ.2700க்கும், இந்திய பட்டு நூல் ரூ.1700க்கும் விற்கப்பட்டது. தற்போது முறையே ரூ.4100, ரூ.3100 என விற்கப்படுகிறது. விலை உயர்வால், ஒரு சேலைக்கு ரூ.200 இழப்பு ஏற்படுகிறது. அதனால், பட்டு நூல் விலையை குறைக்க வலியுறுத்தி வரும் 25ம் தேதி வரை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகிறோம். இதில், ரூ.7 கோடி வர்த்தகம் முடங்கும்‘‘ என்றார்.

**கரும்பு வெட்டும் இயந்திர செயல்பாடு குறித்து பயிற்சி**

விக்கிரவாண்டி, : விக்கிரவாண்டி அருகே முண்டியம்பாக்கம் தனியார் சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் ரோவர் வேளாண் கல்லூரி சார்பில் வேளாண் மாணவர்களின் களப்பயிற்சி

நடைபெற்றது. கஞ்சனூர் டெவிசன் கரும்பு விரிவாக்க அலுவலர் பாஸ்கரன் தலைமை தாங்கினார். கரும்பு உதவி ஆய்வாளர் ஜானகிராமன் முன்னிலை வகித்தார். இதில் கல்லூரி மாணவர்கள் நேமூர், கஞ்சனூர், பிரம்மதேசம், திருநந்திபுரம் ஆகிய கிராமங்களில் தங்கி விவசாயிகளிடம் கரும்பு வெட்டும் இயந்திரத்தின் செயல்பாடு, அதன் பயன்கள், முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தனர். இதில் கல்லூரி மாணவர்கள் மிதுன்ராஜ், திருநாவுக்கரசு, முருகானந்தம், ஜென்னிசாமுவேல், ராஜ்பாண்டியன், விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கடும் வறட்சி காரணமாக பாண்டிச்சேரியில் இருந்து வரும் வைக்கோல் இண்டூரில் விற்பனை**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் கால்நடை தீவனங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பாண்டிச்சேரி மற்றும் கடலூர் மாவட்டங்களில் இருந்து வைக்கோல் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்திற்கு இண்டூர் பகுதியில் விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டம் உள்பட தமிழகம் முழுவதும் கடந்தாண்டு பருவ மழை பொய்த்ததை அடுத்து கடும் வறட்சி ஏற்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் 80 ஆயிரம் ஏக்கருக்கு மேல் வறட்சி ஏற்பட்டுள்ளது. தமிழக முதல்வர் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டார். இதன்படி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது கட்டமாக நிவாரணம் வழங்க விவசாயிகளிடம் மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் நெல் பயிரிட்ட விளைபயிர்கள் அனைத்தும் காய்ந்து கருகிவிட்டதால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. வைக்கோல் இன்றி வெளி மாவட்டங்களில் இருந்து வைக்கோல் பெறப்பட்டு வந்தன.

இந்நிலையில் இண்டூர் பகுதியில் கால்நடைகளின் தீவன வைக்கோல் தேவைக்கு பாண்டிச்சேரி மற்றும் கடலூர் மாவட்டத்தில் இருந்து மினிவேன், லாரிகளில் வைக்கோல் ஏற்றப்பட்டு விற்பனைக்கு இண்டூர் மெயின்ரோட்டில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு டன் வைக்கோல் ரூ.5 ஆயிரம் வீதம் ஒரு மினி வேன் வைக்கோல் ரூ.7,500க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாளொன்றுக்கு 10 டன் வைக்கோல் விற்பனையாகிறது.

இந்த வைக்கோலை பென்னாகரம், இண்டூர், பாப்பாரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வாங்கி செல்கின்றனர்.

**யானை, காட்டுப்பன்றிகளால் பயிர் சேதம் விவசாயிகளுக்கு 100 சதவீத இழப்பீடு தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காட்டு யானைகள் மற்றும் காட்டு பன்றிகளால் 100 சதவீதம் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு 100 சதவீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் குள்ளட்டி கிராமத்தில் தமிழக விவசாயிகள் சங்க கொடியேற்று விழா நடந்தது. இந்த விழாவிற்கு மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணப்பா தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணப்பா, கூட்டுறவு கடன் சங்க தலைவர் ராமன், ஒன்றிய கவுன்சிலர் ரகு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணை செயலாளர் ரவி வரவேற்றார். விழாவில் தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் ராமகவுண்டர் பங்கேற்று கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்று பேசினர். மாவட்ட டிராக்டர் உரிமையாளர்கள் சங்க தலைவர் முனிராஜ் நன்றி கூறினார். அதை தொடர்ந்து நடந்த கூட்டத்தில், கெலமங்கலம் ஒன்றியத்தில் திமுக அரசு 2 ஏக்கர் இலவச நிலம் வழங்க பயனாளிகள் தேர்வு செய்து, பட்டா வழங்க அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்தது. ஆனால் அதிகாரிகள் இத்திட்டத்தை செயல்படுத்தாமல் நிறுத்திவிட்டனர். எனவே அந்த பயனாளிகளுக்கு தமிழக அரசு பட்டா வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்வது. காட்டு யானைகள் மற்றும் காட்டு பன்றிகளால் 100 சதவீதம் பயிர் சேதம் அடைந்த விவசாயிகளுக்கு 100 சதவீதம் இழப்பீடு வழங்க வேண்டும். கிருஷ்ணகிரியில் வருகின்ற ஜூலை மாதம் 5ம் தேதி நடைபெறும் உழவர் தின பேரணிக்கு கெலமங்கலம் ஒன்றியத்தில் இருந்து 4500 விவசாயிகள் பங்கேற்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கோழிக்கொண்டை பூச்செடிகளில் நோய் தாக்குதல்**

பல்லடம்,: பல்லடத்தில் கோழிக்கொண்டைப் பூக்களுக்கு பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டு விளைச்சல் பாதித்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் சுற்றுவட்டாரப்பகுதிகளான சித்தம்பலம், வெங்கிட்டாபுரம் ,கரசமடை, செலக்கரச்சல் உள்ளிட்ட பகுதிகளில் 100 க்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுகிய கால பணப்பயிரான கோழிக்கொண்டை பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

சாகுபடி செய்த 3 மாதங்களில் அறுவடைக்கு வரும் இந்த பூக்கள் திருப்பூர்,கோவை பகுதிகளில் உள்ள பூ மார்கெட்டுகளுக்கு விற்பனைக்கு அனுப்பபடும்.

இந்நிலையில் கடந்த வைகாசி மாதம் முதல் திருமண முகூர்த்தங்கள் அதிகம் இருந்ததை தொடர்ந்து இந்த பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டு கிலோ 80 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனையானது. கோழிக்கொண்டைப்பூக்களின் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இதற்கிடையில் வெயில் முடிந்து காற்றுடன் கூடிய சீதோஷ்ண நிலைமாறியதைத் தொடர்ந்து கோழிக்கொண்டைப்பூக்களை பச்சைப்பூச்சி மற்றும் சிறுவண்டுகள் போன்றவை தாக்க ஆரம்பித்தது.

இதனால் மலரும் தருணத்தில் உள்ள பூக்கள் வாடி வதங்கியும், செடிகளின் இலைகளில் ஓட்டைகள் விழுந்தும் பூக்கள் மகசூல் பாதித்தது. இதனால் பூச்செடிகளுக்கு பலவிதமான வீரியம் மிக்க மருந்துகளை விவசாயிகள் தெளித்து வருகின்றனர். எவ்வளவுதான் மருந்துகளை தெளித்தாலும் பூக்களின் உட்பகுதிக்கு சென்று ஒளிந்துகொள்ளும் பூச்சிகள் மறுபடியும் பூக்களை தாக்குவதால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

கோழிக்கொண்டைப்பூக்கள் கிலோ 100 ரூபாய் என நல்ல விலைக்கு விற்றபோதும் பூச்சி தாக்குதலால் வருகிற லாபம் முழுவதும் பூச்சிமருந்திற்கும் உரத்திற்குமே செலவிட போதுமானதாக உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இப்பகுதியில் வீசும் பலமான கோடைக்காற்று, தண்ணீர் பற்றாக்குறை போன்ற பிரச்னைகளால் பூ விவசாயம் பாதியாக குறைந்துள்ளது. இந்த பூச்சி தாக்குதல் நோயால் விளைச்சலும் போய் வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

**ஆண்டிபட்டியில் வெண்டை பயிரை தாக்கும் தண்டுதுளைப்பான் நோய் விவசாயிகள் வேதனை**

ஆண்டிபட்டி, : ஆண்டிபட்டி பகுதியில் வெண்டை பயிரை தண்டு துளைப்பான் நோய் கடுமையாகத் தாக்கியுள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் ராமலிங்காபுரம், அனுப்பபட்டி, புள்ளிமான்கோம்பை, நாகுலுகவுண்டன்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் வெண்டை பயிரிடப்பட்டுள்ளது. இப்பயிரில் தாக்கியுள்ள தண்டு மற்றும் காய் துளைப்பான் பூச்சிகளின் பழுப்பு நிற இளம்புழுக்கள் செடியினை தாக்குவதால் நுனி காய்ந்து கருகி விடுகின்றன. இளம் மொட்டுக்களும், பூக்களும் உதிர்ந்து விடுகின்றன. இப்புழுக்கள் காய்களை துளைப்பதால் காய்கள் சுருங்கி வடிவம் மாறி விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு நடப்பாண்டில் சேதம் கடுமையாக உள்ளது. இதுகுறித்து விவசாயிகள் பலமுறை புகார் கூறியும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. தங்களுக்கு உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து கேரளாவுக்கு கடத்தல்**

மூணாறு, : கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் ஏலகாய் விவசாயம் நடைபெற்று வருகிறது. தற்போது ஏலக்காய் சீசன் தொடங்கியுள்ளது. ஏலச்செடிகளை பூச்சிக்கள் தாக்குவதன் மூலம் மகசூல் பாதிப்படையாமல் இருப்பதிற்காக பூச்சிக்கொல்லி

மருந்துக்கள் தெளிக்கப்படுகிறது.
கேரள மாநிலம் மற்றும் மத்திய அரசுக்களால் தடைசெய்யப்பட்ட எண்டோசல்பான் பூச்சிக்கொல்லி மருந்துக்கள் தமிழகத்திலிருந்து அதிகளவில் இடுக்கி மாவட்டத்திற்கு கடத்தப்பட்டு வருகிறது. இந்த மருந்துக்களை பயிர்களுக்கு தெளிப்பதால் தோட்டங்களில் வேலை செய்துவரும் தொழிலாளிகள் இதயநோய்கள், மூச்சுத்திணறல், சருமநோய்கள், புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்திலிருந்து பூச்சிக்கொல்லி மருந்து கடத்தப்படுவதை தடை செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஆண்டிபட்டியில்ரசாயனகல்வைத்து பழுக்கவைத்தமாம்பழங்கள்விற்பனை**

ஆண்டிபட்டி, : ஆண்டிபட்டி பகுதியில் மாம்பழங்களை ரசாயனக்கல் வைத்து பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு உடல் உபாதைகளால் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் பாலக்கோம்பை, வண்டியூர், வருசநாடு, தெப்பம்பட்டி உள்ளிட்ட மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரப் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் மாம்பழங்கள் விளைவிக்கப்படுகின்றன. இங்கு விளையும் செந்தூரம், மல்கோவா, கல்லாமை, பங்கனப்பள்ளி, காசா, அல்போன்சா சப்போட்டா, தாளவாடி, இமாம் பசந்த் வகை மாம்பழங்கள் சுவை மிகுந்தவை. இதனால் இவ்வகை மாம்பழங்களுக்கு கிராக்கி அதிகம்.

ஆண்டிபட்டி மார்க்கெட்டிலிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், அண்டை மாநிலமான கேரளாவிற்கும் வியாபாரிகளால் கொண்டு செல்லப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வகை மாம்பழங்களை தேவைக்கேற்ப உடனடியாக பழுக்க வைக்க மாம்பழங்களை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் வியாபாரிகள் அவற்றை இயற்கை முறையான வைக்கோல் வைத்து பழுக்க வைக்காமல் சோடியம் கார்பைட் ரசாயன கற்களை வைத்து பழுக்க வைக்கின்றனர். இதனால் 3 நாட்களில் பழுக்க வேண்டிய பழங்கள் 12 மணி நேரத்தில் பழுத்து விடுகின்றன. இவ்வகையில் பழுக்க வைக்கும் மாம்பழங்களை சாப்பிடும் பொ£துமக்கள் தலைவலி, கண்வலி, வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகளால் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து ராமலிங்கபுரத்தை சேர்ந்த மாம்பழ விவசாயி குருசாமி கூறு கையில், ‘மாதா ஊட்டாத உணவையும் மாம்பழம் ஊட்டும் என்பார்கள். அத் தகைய அற்புத உணவான மாம்பழங்களை ரசாயன முறையில் பழுக்க வைப் போர் மீது சுகாதாரத்துறை, மற்றும் உணவு கட்டுப்பாட்டுத்துறை கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட துறைகளுக்கு புகார் மனு அனுப்பியுள்ளோம்’ என்றார்.

**தொடர் மழையால் நிவாரணம் தாமிரபரணி ஆற்றில் உப்பு தன்மை மாறியது**

குமரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் தாமிரபரணி ஆற்று தண்ணீரில் இருந்து வந்த உப்புத்தன்மை நீங்கி தற்போது நன்னீராக மாறியுள்ளது.
குமரி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் கோதையாறு, குற்றியாறு, கிழவியாறு, சாத்தாறு மற்றும் சிறு சிறு காட்டாறுகள் உற்பத்தியாகி திருவட்டார் மூவாற்றுமுகத்தில் பரளியாற்றுடன் கலந்து தாமிரபரணி ஆறாக சுமார் 63 கிலோ மீட்டர் தூரம் கடந்து தேங்காப்பட்டணம் கடலில் கலக்கிறது. சுனாமி கூட்டுக்குடிநீர் திட்டம், குழித்துறை கூட்டுக்குடிநீர் திட்டம் உள்பட பெரும்பாலான குடிநீர் திட்டங்கள் தாமிரபரணி ஆற்றில் தான் செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக ஆற்றின் பல இடங்களிலும் உறைகிணறுகள் அமைக்கப்பட்டு தண்ணீர் பம்ப் செய்து மாவட்டம் முழுவதும் சப்ளை செய்யப்படுகிறது.
தாமிரபரணி ஆறு குமரி மாவட்டத்தில் வற்றாத ஜீவநதியாக உள்ளது. ஆற்றில் கடல்நீர் கலக்காமல் தடுக்க கடற்கரையில் இருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்தில் எஸ்டி மங்காடு பாலத்தின் அருகே தடுப்பணை இருந்தது. பாலம் பணி மேற்கொண்டபோது தடுப்பணை சேதமடைந்தது. அப்போது பொதுமக்கள் சார்பில் தடுப்பணையை உடனடியாக சீரமைக்க வேண்டும் இல்லையென்றால் பேராபத்து ஏற்படும் என எச்சரிக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் அதை பொருட்படுத்த வில்லை.
இந்நிலையில் இந்த ஆண்டு கோடை வறட்சி வாட்டி வதைத்தது. அப்போது குழித்துறை தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் குறைந்து நீரோட்டம் இல்லாமல் இருந்தது. இந்த காலகட்டத்தில் தேங்காப்பட்டணத்தில் இருந்து கடல்நீர் ஆற்றுக்குள் புகுந்து குழித்துறை வரை சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் வந்தது. இதனால் ஆற்றில் அமைக்கப்பட்டிருந்த உறை கிணறுகளிலும் உப்பு தண்ணீர் கலந்தது.
மேலும் கடல்நீர் ஆற்றின் பெரும்பாலான இடங்களில் தேங்கியதால் அந்த பகுதிகளில் நிலத்தடி நீரும் உப்பானது. ஆற்றங்கரையோர வீடுகளில் உள்ள கிணறுகளிலும் உப்பு சுவை கலந்தது. குடி தண்ணீர் இன்றி பொதுமக்கள் பாதிக்கப்பட்டதோடு, விளைநிலங்களிலும் உப்பு படிகங்கள் உருவாக தொடங்கின. இந்த உப்பு படிகங்களால் நீரேற்று இயந்திரங்களும் பழுதடைந்தன. தாமிரபரணி ஆற்றில் உப்பு தண்ணீரை வெளியேற்ற வலியுறுத்தி பொதுமக்கள், பாசனத்தார் சங்கங்கள் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதையடுத்து மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு, பேச்சிப்பாறை, சிற்றாறு அணைகளில் இருந்து 100 கன அடி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது. பொதுப்பணித்துறை சார்பில் உப்பு கலந்த சகதி அகற்றும் பணி நடந்தது. என்றாலும் தாமிரபரணி ஆற்றில் தேங்கி கிடந்த உப்பு சுவை மாறவில்லை.
இந்நிலையில் பருவமழை பெய்யத்தொடங்கியது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடத்தொடங்கியது. இதனால் ஆற்றில் தேங்கி கிடந்த உப்பு படிகங்கள், சகதியில் படிந்திருந்த உப்பு அனைத்தும் கடலுக்கு அடித்து செல்லப்பட்டது. தாமிரபரணி ஆற்றில் தற்போது உப்பு சுவை குறையத்தொடங்கியுள்ளது.
இது குறித்து குமரி மாவட்ட பாசனத்துறை தலைவர் வின்ஸ்ஆன்றோ கூறும்போது, தடுப்பணைகள் அமைக்கப்படாததால் உப்புநீர் பாதிப்பு அதிகமாக இருந்தது. வீடுகளில் உள்ள

கிணறுகளிலும் உப்புநீர் சுரந்தது. தற்போது பெய்த மழையால் உப்புநீர் அடித்து செல்லப்பட்டுள்ளது. இந்த மழையை நம்பி மாவட்ட நிர்வாகம் இருந்து விடக்கூடாது. எஸ்.டி.மங்காடு, இறையுமன்துறை, குழித்துறை உள்ளிட்ட இடங்களில் உடனடியாக உறுதியான மேம்படுத்தப்பட்ட தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்றார்.

நிரந்தர தீர்வுக்கு தடுப்பணை அவசியம்

குமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் கரைபுரண்டோடும் வெள்ளம்.

**மாவட்டத்தில் பரவலாக பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

ஆத்தூர், : சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரம் நீடித்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், ஓமலூர் உள்ளிட்ட பகுதியில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலவியது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பருவமழை ஒரு மாதத்திற்கும் மேலாக பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன் திடீரென 3 நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. இதன் பின்னர் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. கடந்த 3 நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்ட போதும் மழை பெய்யவில்லை. ஏற்கனவே கடந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யாததால் விவசாய பணிகள் முற்றிலுமாக முடங்கியது. அதே நிலை இந்த ஆண்டும் ஏற்படுமோ என்ற கலக்கத்தில் விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் திடீரென சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திடீரென மழை பெய்தது. முதலில் சாரலாக துவங்கிய மழை, தொடர்ந்து கனமழையாக மாறியது. ஒரு மணி நேரம் பெய்த மழையால் சாலையில் மழைநீர் வெள்ளம் போல ஓடியது. சேலம் நகர் பகுதியிலும் பல இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. ஓமலூர் பகுதியில் திடீரென மழை பெய்தது. பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் திடீரென மழை பெய்ததால் தண்ணீர் தேங்கியது. தற்போதைய காலநிலையை பருவமழையின் துவக்கமாக கருதும் விவசாயிகள் பலரும் சாகுபடிக்கான ஆயத்த  பணிகளை துவங்கி உள்ளனர். ஆத்தூரில் சாரதா ரவுண்டானா பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்காலில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் மழைநீர் சாலையில் வெள்ளம் போல் ஓடியது. தண்ணீர் சாலையில் தேங்கி, சேலம் & சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுகுறித்து தகவலறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு வந்த ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் (பொ) ஜெகதீஸ்வரி மற்றும் அதிகாரிகள் கழிவுநீர் சாலையில் தேங்காமல் இருக்க நீரோட்ட பாதையை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் பின்னர் சாலையில் தேங்கிய தண்ணீர் வெளியேறியது.

**விதிமீறி விளை நிலங்களில் செம்மண் எடுக்கப்படுகிறது**

கடலூர், : விவசாய நிலங்களில் அத்துமீறி செம்மண் எடுக்கும் தனியார் குவாரி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடலூரில் நேற்று நடந்த மக்கள் குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் புகார் மனு அளித்தனர்.

கடலூர் அருகே வழிசோதனைபாளையம் கிராமத்தை சேர்ந்த பாண்டுரங்கன், சித்ராஅருணாசலம், ரங்கநாதன், கண்ணுசாமி உள்ளிட்ட விவசாயிகள் நேற்று கடலூரில் நடந்த மக்கள் குறை கேட்பு கூட்டத்தின் போது கடலூர் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ராஜேந்திரனிடம் அளித்த புகார் மனுவில் கூறியிருந்ததாவது: செம்மண்குவாரிக்காக வழிசோதனைபாளையத்தில் எங்கள் விளைநிலங்களுக்கு அருகே அமைந்துள்ள சாலைகளிலும், அரசு விதி மீறி 30 அடி பள்ளம் தோண்டி செம்மண் எடுக்கப்படுகிறது. இதனால் நிலங்களில் உள்ள முந்திரிமரங்கள் அந்தரத்தில் தொங்கும் நிலையில் உள்ளன. வயலுக்கு தண்ணீர் பாய்ச்சினால் அருகில் உள்ள குவாரி பள்ளத்தில் வழிந்து வீணாகிறது. கிராம பகுதியில் நிலத்தடிநீரும் குறைந்து போய் விட்டது. பொதுப்பாதையான சான்றோர்பாளையம் புருகீஸ்பேட்டை, வண்டிப்பாளையம், கடலூருக்கு செல்லும் பாதையில் செம்மண் அள்ளியதால் மிகப்பெரிய பள்ளங்கள் உருவாக்கப்பட்டு அந்த சாலை துண்டிக்கப்பட்டு விட்டது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட குவாரிகளை நேரில் ஆய்வு செய்து சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். தொன்று தொட்டுவரும் விவசாயத்தை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**உரம் விலை உயர்வு எதிரொலி இயற்கை தொழு உரங்களுக்கு மாறிய விவசாயிகள்**

காட்டுமன்னார்கோவில் பகுதியில் விவசாயிகள் இயற்கை உரத்திற்கு மாறியுள்ளனர். இந்த பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் ரசாயன உரங்களை பயன்படுத்தி வந்தனர். இதனால் விளைச் சல் குறைந்தது மட்டுமின்றி மண் வளமும் குறைந்தது. தொடர்ந்து பயிர் செய்ய முடியாமல் சிரமப்பட்டனர். கடந்த ஆண்டு தண் ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட நிலையிலும் விவசாயிகள் அதிக விலை கொடுத்து ரசாயன உரங்களை வாங்கி பயன்படுத்தினர். தொடர்ந்து உர விலை கடுமையாக உயர்ந்து வருவதால் விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர். மூதாதையர் காலங்களில் கால்நடைகளின் கழிவுகளை மக்கிய தொழு உரங்களாக பயன்படுத்தினர். இதனால் விளைச் சல் அதிகமாக இருந்தது. மேலும் உணவு பொருள்களின் தன்மை மாறாமல் இருந்தது. தற்போது ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால் உணவு பொருள்களின் ருசி தன்மை மாறி மனிதர்களின் உடலில் பல் வேறு நோய்களை ஏற்படுத்துகிறது. இதை கருத்தில் கொண்டு மீண்டும் விவசாயிகள் மட்கிய இயற்கை தொழு உரங்களை வாங்கி இந்த ஆண்டு விவசாயம் செய்வதற்கு வயல்களில் குவித்து வருகின்றனர்.

**பலத்த காற்றில் சேதம் எதிரொலி வாழை இலை விலை கடும் உயர்வு**

காட்டுமன்னார்கோவில் பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்தகாற்று வீசி வருவதால் வாழை மரங்கள் சேதமடைகின்றன. இதனால் இலைகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. வாழை இலை பல்வேறு விசேஷங்களுக்கு பயன்பட்டு வருகிறது. விருந்தோம்பல் நிகழ்ச்சியில் வாழை இலைக்கு தனி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால் காய்கறி கடைகளில் வாழை இலை விற்பனை காலை நேரங்களில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெறும். இதை கருத்தில் கொண்டு இந்த பகுதியில் உத்திரசோலை, லால்பேட்டை, ஆதனூர் மற்றும் கொள்ளிடக்கரையோர பகுதிகளில் வாழை சாகுபடியை விவசாயிகள் தீவிரமாக செய்து வந்தனர். வாழை சாகுபடியில் அனைத்து பகுதிகளையும் விற்பனை செய்யும் நிலை உண்டு. இந்த ஆண்டு தற்போது அதிகமாகவும், பலமாகவும் காற்று வீசுவதால் வாழை இலைகள் தோப்புகளில் சேதமடைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக வாழை இலையின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

**காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததால் பரமத்திவேலூர் விவசாயிகள் கண்ணீர்**

பரமத்திவேலூர், : காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததால் பரமத்தி வேலூர் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

பரமத்தி வேலூர் பகுதியில் காவிரி ஆற்றை நம்பி சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிர் சாகுபடி நடைபெற்று வருகிறது. வாழை, வெற்றிலை, நெல், கரும்பு பயிர் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. பாய் முடைய பயன்படுத்தப்படும் கோரை சாகுபடியும் காவிரி ஆற்று படுகையில் நடைபெற்று வருகிறது.

ஆனால், குறிப்பிட்ட தினமான ஜூன் 12ம் தேதி காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படாததால் விவசாயம் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பரமத்தி வேலூர் பகுதியில் சுமார் 416 விவசாய கிணறுகள் உள்ளன. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லாதபோது கிணற்று பாசனம் செய்யப்படுவது வழக்கம். இந்த விவசாய கிணற்று பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் இல்லாத நிலையில், டீசல் பம்புசெட்டுகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். நாள் ஒன்றுக்கு டீசலுக்காக மட்டும் ரூ.2 ஆயிரம் வரையிலும் செலவாகும் நிலையில், கிணற்றிலும் தண்ணீர் இல்லாததால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை பெய்யாததாலும், காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லாததாலும் கடந்த சில ஆண்டுகளாகவே சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கடந்த ஓராண்டில் மட்டும் பல கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக காவிரி ஆற்று படுகை விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், எஞ்சிய கால்வாசி பயிர்களையாவது காப்பாற்றிவிடலாம் என்று காவிரி ஆற்றின் மையப்பகுதியில் ஊற்று தோண்டி அதில் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தனர். ஆனால், ஆற்றின் நடுவில் குழி தோண்டி தண்ணீர் எடுக்க

தடை உள்ளதாக கூறி, பம்பு செட்டுகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர். விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் தத்தளித்து வரும் நிலையில், குடிப்பதற்கு கூட தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

பரமத்தி, வேலூர் டவுன், பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, குச்சிபாளையம், நன்செய் இடையாறு, ஓலப்பாளையம், பாலப்பட்டி, ராமநாயக்கன்பாளையம், எல்லைக்காட்டூர் உள்ளிட்ட இடங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, கர்நாடக அரசு காவிரியில் தண்ணீரை திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என 17 ஊர் விவசாயிகள் சங்க தலைவர் மாயாண்டி கண்டர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டும். மேலும், கர்நாடக அரசை வலியுறுத்தி தமிழக அரசு தண்ணீர் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் ஆதாரத்திற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோர்ட்டு தீர்ப்பை மதித்து உரிய முறையில் தண்ணீர் திறந்து விட்டாலே போதும் பாதி அளவாவது விவசாயம் நடைபெறும். குடிப்பதற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. எனவே, கர்நாடக அரசு தனது பிடிவாதத்தை தளர்த்தி உடனடியாக காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விட வேண்டும். கர்நாடக அணைகளின் தண்ணீர் இல்லை என்று கூறி, கர்நாடக அரசு பிடிவாத போக்கினை கடைபிடித்து வருவதை கைவிட வேண்டும்.

இவ்வாறு மாயாண்டி கண்டர் தெரிவித்தார்.

**பரவலான மழையால் காய்கறி விவசாயம் சுறுசுறுப்பு**

குன்னூர்,: நீலகிரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பெரும்பாலான விவசாயிகள் காய்கறி விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்து வருகிறது.

இதனால், தேயிலை மகசூலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.கடந்த 3மாதமாக மழை பெய்யாததால் போதிய மகசூலின்றி விவசாயிகள் பெரும் சிரமத்துக்குள்ளாயினர்.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த பரவலான மழையின் போது பெரும்பாலான விவசாயிகள் தங்களது தோட்டத்திற்கு உரமிட்டு பராமரித்ததால் தற்போது தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. ஒரு சில தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலையின் வரத்து அதிகரித்ததின் காரணமாக பசுந்தேயிலையை கொள்முதல் செய்ய கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. வரும்நாட்களில் மகசூல் அதிகரிக்கும் என்பதால் அதற்கேற்றார் போல் தேயிலைத்தூள் உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்கள் தயாராகி வருகின்றனர்.

இருப்பினும் ஏல மையங்களில் தேயிலைத்தூள் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை வெகுவாக சரிந்து வருகிறது. மகசூல் அதிகரித்தும் உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதனிடையே, தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி மலைத்தோட்ட காய்கறி விவசாயத்தை பெரும்பாலான விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள பயிர் களையும் பராமரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**கரும்பு பயிரில் இரும்பு, போரான் சத்துகள் பற்றாக்குறை போக்க வழிமுறை வேளாண் அலுவலர் விளக்கம்**

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் இரும்பு, போரான் சத்துகள் பற்றாக்குறை போக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கரும்பு பயிரில் இரும்பு சத்து பற்றாக்குறையால் இளம் இலைகள் வெளுத்து காணப்படும். பயிரின் குருத்து இலைகளும் காகிதம் போன்று வெளுத்தும் காணப்படும். இக்குறையை போக்க 5 கிராம் பெர்ரஸ் சல்பேட் (அன்னபேதி உப்பு) மற்றும் 10 கிராம் யூரியாவை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக தெளிக்க வேண்டும் அல்லது ஏக்கருக்கு 10 கிலோ பெர்ரஸ் சல்பேட்டையும், 5 டன் தொழு உரத்தையும் அடியுரமாக இடவேண்டும்.

துத்தநாகச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இலைகளின் நடுவில் பெரிய காய்ந்த கோடுகளும் மற்றும் இலை நடு நரம்பில் காய்ந்த புள்ளிகளும் தோன்றும். இதை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு துத்தநாகசல்பேட் 10 கிலோ அடியுரமாக இடவேண்டும் அல்லது 5 கிராம் துத்தநாக சல்பேட்டை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாக தெளிக்க வேண்டும்.

போரான் சத்து பற்றாக்குறையால் இலைகளின் நுனியில் இருந்து 2& 3 செமீ அகலத்திற்கு அழுகிய பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும்.

இலைகள் மிகவும் சிறுத்து, இளம் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும். வளரும் கரும்பின் நுனிப்பகுதி காய்ந்தும், அதன் பக்காவாட்டில் இலை குருத்துகள் அனைத்தும் ஒரே கொத்தாக காணப்படும். இக்குறையை போக்க ஏக்கருக்கு போராக்ஸ்& 400 கிராமை அடியுரமாக இடவேண்டும் அல்லது போராக்ஸ் 3 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.